*Journal of Sri Lanka Library Review, Volume 40, Issue I, January 2026, 24-44*
*DOI: https://doi.org/10.4038/sllr.v40i1.85*

---

# உத்தியோகத்தர்களின்தகவல் தேடும் நடத்தைப் பாங்கு: சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

# Information Seeking Behaviour of Academic Staff of Swamy Vipulananda Institute of Aesthetic Studies: A Case Study

**Prashanthan, B**[1]

**Abstract**

The study discusses the information-seeking behaviours of academic staff in Swamy Vipulananda Institute of Aesthetic Studies. The study used a survey research design, and the population of the study comprises all 52 academic staff of the Swamy Vipulananda Institute of Aesthetic Studies. Accordingly, 44 (84.61%) academic staff responded to this study. Data was analyzed with descriptive statistics such as simple percentages and frequency count. Information seeking behaviour of the academic was analyzed through four ways: purposes for seeking information, information sources used by academic staff, influence of demographic factors on information seeking, and challenges faced by academic staff during the information seeking. The findings revealed that the majority of the academic staff, 40 (90.91%) required information for teaching and research. It was also noted that most of the staff depended on the printed textbooks (90.91%). The study further revealed that demographic factors of gender and age did not influence the information-seeking behavior of the academic staff. Work experience and educational qualifications of the academic staff significantly influenced the information-seeking behavior of the staff. Based on the findings need to improve the level of information literacy skills and the lack of adequate infrastructure facilities were identified as the main challenges when seeking information. Therefore, this study recommends that the Institute management take **steps** to increase the infrastructure facilities that are currently at a low level in a timely manner, and proposes organizing Information Literacy skills workshops at regular intervals.

**Keywords:** Academic staff, Information literacy, Information seeking behavior

---

[1] Senior Assistant Librarian, Eastern University, Sri Lanka.

Email: prashanthanb@esn.ac.lk https://orcid.org/0009-0007-8330-1528

Received: 30th September 2025, Accepted revised version: 27th January 2026
This work is licensed under a Creative Commons Attribution-Share Alike 4.0 International License.

## அறிமுகம்

உயர்கல்விச் சமூகம் ஒன்றில் தகவல் பயன்பாடு மற்றும் தகவல் பரிமாற்றம் போன்றன முக்கியத்துவம் மிக்கதாகும். தகவல் இன்றி கற்றல், கற்பிததல் மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளில் ஓர் உயர்கல்விச் சமூகம் ஈடுபடமுடியாது. இந்நிலையானது அபரிமிதமானதாகவும் பல்வேறு விதமான தகவல்வள சாதனங்கள் ஊடாக தகவல் வெளிவரும் சமகால உயர்கல்விச் சூழலில் மேலும் வலுவான தாக்கம் செலுத்தும் விடயமாகக் காணப்படுவதோடு தகவலைத் தேடுதல், இனம்காணல், பயன்படுத்தல், மதிப்பிடுதல் போன்ற பல்வேறு விடயங்களிலும் காத்திரமான இடத்தினைப் பெற்றுள்ளது. 'இன்று தகவல் இன்றி மக்கள் வாழ்வதானது சாத்தியப்பாடற்ற விடயமாகியுள்ளது' (Gunasekara, 2008 p. 47). எக் கருத்துரைத்துள்ளமையானது இதனை மேலும் தெளிவுபடுத்துகின்றது. இப்பின்னணியில் தகவல் பயனாளர்களில் தகவல் தேவை, தகவல் தேடும் போக்கு/ நடத்தை போன்றவற்றின் மீது கவனம் செலுத்துவது கல்விசார் சமுகம் ஒன்றிற்கு இன்றியமையாததோடு விசேடமாக கற்பித்தல் மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளுக்கு பெரும் பங்காற்றும் கல்விசார் உத்தியோகத்தர்கள் தகவல் தேவை மற்றும் தகவல் தேடும் போக்கு போன்றவற்றில் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும். பல்கலைக்கழகங்களில் அல்லது உயர்கல்வி நிறுவனங்களில் கல்விசார் உத்தியோகத்தர்களின் பணியானது இன்றியமையாததாக அமைவதோடு அந்நிறுவனங்களின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு அத்தியாவசியமானதாகவும் அமைகின்றது. கல்விசார் உத்தியோகத்தர்கள் உயர்கல்வி நிறுவகத்தின் அங்கத்தவர் என்பதற்கு அப்பால் விரிவுரை நிகழ்த்துபவர்களாக, ஆலோசகர்களாக, புலமையாளர்களாக மற்றும் கல்விசார் முகாமைத்துவத்தின் பங்காளர்களாகப் பணியாற்ற வேண்டியவர்களாகின்றனர் என (Ogunbodede & Oniorosa, 2019). தமது ஆய்வில் கருத்துரைத்துள்ளமையும் இங்கு

அவதானத்திற்குரியதாகின்றது. எனவே இத்தகைய இலக்குகளை திறமையாக நிறைவேற்றவேண்டுமானால் கல்விசார் உத்தியோகத்தர்கள் தமது அறிவினைத் தொடர்ந்தேர்ச்சியாக அதிகரிக்கவேண்டியவர்களாக உள்ளதோடு அதற்கமைய பல்வேறு தகவல் வளங்களின் ஊடாக தகவலைப் பெற்று மதிப்பிட்டு பயன்படுத்தவேண்டியவர்களாகின்றனர். Ifijeh, Ogbomo and Ifijeh (2018) ஆகியோரின் கருத்துப்படி தகவலானது கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் தகைமையை விருத்தி செய்வதற்காககவும், மேன்நிலைப்பட்ட ஆய்வுச் செயற்பாடுகளுக்காகவும் தமது துறைசார் சமகால விடயங்களை அறிந்திருப்பதற்காககவும் மற்றும் ஏனையோர்கள் மத்தியில் தமது நிபுணத்துவத்தை உயர்த்துவதற்கும் தேவையாக உள்ளது. இக்கருத்தினை ஒத்ததாகவே பொதுவாக கல்விசார் உத்தியோகத்தர்கள் தமது பாடத்துறைகளுடன் ஆர்வமாகச் செயற்படக்கூடியவர்களாக அல்லது அவற்றைக் கற்பவர்களாக இருப்பர். அவர்களுடைய முக்கிய தகவல் தேடலானது அவர்களுடைய கற்பித்தல், ஆய்வு மற்றும் தொழில்சார் விருத்திக்கு உதவிபுரியக்கூடியதாகவே அமையும். (Aina, 2005) எனும் கருத்தும் நோக்கத்தக்கதாகும்.

எனவே உயர்கல்விச் சூழலில் தகவல் தேவை தொடர்பாக நோக்குகின்றபோது கல்விசார் ஊழியர்களின் தகவல் தேவையானது அச்சூழலில் கடமையாற்றும் மற்றும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஏனைய நபர்களை விட முக்கியத்துவமிக்கதாகின்றது என்பது தெளிவாகின்றது. குறிப்பாக உயர்கல்வி நிறுவன கல்விசார் உத்தியோகத்தர்களின் கற்பித்தல் செயற்பாடானது கற்றல் செயற்பாட்டிற்கு உதவுவதோடு ஆய்வுச் செயற்பாடுகளின் ஊடாக அறிவுப் பரவலாக்கத்திற்கு பங்களிப்பு நல்கும்போதே குறிப்பிடக்கூடிய கற்பித்தல் செயற்பாடாக அமைய முடியும். அவ்வாறு இல்லாதவிடத்து

கற்பித்தல் செயற்பாடானது முழுநிறைவானதாக அமையாது போகலாம். மறுபுறத்தில் தகவல் பாவனையாளர்களின் தகவல் தேடும் நடத்தைப் பாங்கினை அறிந்திருப்பது தகவல் சேவையை வழங்கும் நூலகங்கள் சார்ந்த நிறுவனங்களுக்கு முக்கியத்துவமிக்கதாகும். பாவனையாளர்கள் நடத்தைப் பாங்கினை அறிந்திருக்கும் போதே இவ்வாறான நிறுவனங்கள் தமது நோக்கம்சார் சேவைகளை வினைத்திறனாக ஆற்றமுடியும். 'தகவல் தேடும் நடத்தைப் பாங்கினது ஓர் அத்தியாவசியக் கூறாக தகவல் தேவை சார்ந்து பாவனையாளர்களுக்கான தேவைகளை தகவல் நிலையங்களை வடிவமைப்பதும் விருத்தி செய்வதும் பிரதான இடத்தைப் பெறுகின்றது. (Hemantha and Uma, 2019. pp. 19) தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளமை இவ்விடயத்துக்கு வலுச்சேர்ப்பதாகும். எனவே உயர்கல்வித்துறையில் கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள், கற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் ஏனைய மாணவர்களை விட கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேவைகள் மற்றும் தேடல்கள் தொடர்பாக விசேடமாக நோக்குவது முக்கியத்துவமிக்கதாகும்.

இப்பின்புலத்தில் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு அதிகமான தகவல்சார் தேவைப்பாடுகள் காணப்படுவதுடன் அத் தேவைப்பாடுகள் அனைத்தும் அவர்களுக்கு முக்கியத்துவமிக்கதான விடயங்களில் அதிக கவனம் செலுத்துவதாகக் காணப்படுகின்றது. அதேவேளை இத் தேவைகளுக்காக தகவல் அணுகல் செயற்பாட்டில் ஈடுபடும்போது பல்வேறு வகையான தகவல் வளங்களின் ஊடாக தகவலைப்பெற முயற்சிப்பதை அவதானிக்கலாம். அதாவது குறித்த ஒவ்வொரு விடயத்துக்கான தகவல் தேவையும் அதற்கான தகவல் தேடல் மற்றும் அணுகல் விசேடமானதாக அமையலாம். இவ்விடயமானது தகவல் பாவனையாளரின் தகவல் அணுகல் தொடர்பான நடத்தைப் போக்கிலும்/ பாங்கிலும் மாற்றங்களை உள்வாங்கக்கூடியதாகவே அமையும். 'தகவல் விஞ்ஞானத் துறையில் தகவல் வளங்களும், தகவல்

வழங்குவோரின் தன்மையும் துரித மாற்றத்துக்கு உட்பட்டுவரும் இச்சூழலில் தகவல் தேவையுடைய பாவனையாளரின் தகவல் தேடல்/ அணுகல் தொடர்பான நடத்தைப் பாங்கு குறிப்பாக அவதானத்திற்குரியதாகும்' (Gunasekara, 2008. p.48) தனது ஆய்வில் கருத்துரைத்தமையும் மற்றும் Wilson (2002) தகவல் தேவைகள் எண்ணிக்கையில் அதிகமான காரணிகளால் தீர்மானிக்கப்பட்டதாகும். அவ்வகையில் கிடைக்கக்கூடிய தகவல் வளங்களின் வகைகள் தகவல் தேவைப்படும் நோக்கம், தகவல் தேவைப்பாட்டின் பின்னணி, பாவனையாளரின் தொழில்சார் நோக்கு மற்றும் தகவல் பாவனையாளரின் தனிப்பட்ட நடத்தைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையும் தகவல் தேவைகளுக்காக தகவல் தேடும் பாவனையாளரின் நடத்தையானது வேறுபட்டது என்பதைத் தெளிவாக்குவதுடன், கல்விசார் உத்தியோகத்தர்கள் தகவல் தேவை தொடர்பாக கரிசனை கொள்ளும்போது தகவல்தேடும் நடத்தைப் பாங்கானது அதிக செல்வாக்குச் செலுத்துகின்ற விடயமாக அமைகின்றது என்பது முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

தகவல்தேடும்/ அணுகும் நடத்தைப் பாங்கானது தகவல் தேடும் நபர்களின் வயது, பால், தொழில், கல்வி, இடம், தகவல் தேவையின் நோக்கம் மற்றும் அவர்களின் கலாச்சாரம் போன்றவற்றின் செல்வாக்குக்குட்பட்டதாகும். மேலும் தகவல் வளங்களின் தன்மை, மொழிமூலம், முன்னளிக்கை மொழி, நேரம் மற்றும் தகவலின் தன்மை போன்றவற்றின் செல்வாக்குக்கும் உட்பட்டதாகும். அவ்வகையில் கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடும் நடத்தையானது சமகாலத்தில் அபரிமிதமான தகவல்கள் வெளிவரும் பரப்பில் மாற்றத்திற்குள்ளாகியமையை இலக்கிய மீளாய்வின் ஊடாக அல்லது இவ்விடயம் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சிலவற்றின்மீது

அவதானத்தைச் செலுத்துவதன் மூலம் தெளிவாக்கிக்கொள்ள முடிகின்றது.

Khan Sujjed Asad (2017) கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடும் நடத்தைப் பாங்கானது சமகால தகவல்சார் சூழலில் மாற்றத்திற்குள்ளாகி உள்ளது. இணையம் விரைவாகவும் இலகுவாகவும் தகவலை அணுகுவதற்கான வாய்ப்பினை வழங்குவதனால் அவர்களது கற்பித்தல், ஆய்வு மற்றும் கற்றல் நோக்கத்திற்கான தகவல் வளங்களைப் பெறக்கூடியதாகவுள்ளது என குறிப்பிட்டுள்ளமையும், விரிவுரையாளர்களின் தகவல் தேடும் நடத்தைப் பாங்கானது பொதுவாகப் பல்வேறு முறைகளில் வெளிப்படுத்துகின்றது. அவ்வகையில் மின்னியல் வளங்களை அணுகுதல் தங்களது துறையில் நிபுணத்துவமானவர்களின் ஆலோசனை மற்றும் தமது பல்கலைக்கழக நூலக சேகரிப்பில் உள்ள பருவ மற்றும் ஆய்விதழ்களை உசாவுதல் என விரிவடைந்து காணப்படுகின்றது (Akinola, 2011). அதேவேளை Perise and Otike (2016) தமது ஆய்வில் கல்விசார் உத்தியோகத்தர்கள் அதிக சவால்களை தகவல் தேடலின்போது எதிர்கொள்கின்றனர் அவற்றுள் தமக்குப் பொருத்தமான தகவல் வளங்களை இடம்குறித்து இனம்காணல் (Locating), குறைந்தளவிலான விழிப்புணர்வு, தமது தேவைக்குப் பொருத்தமான வளங்கள் இல்லாமை, மின்னியல் வளங்களின் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வு குறைந்த மட்டத்தில் காணப்படல் போன்றனவற்றைக் குறிப்பிடுகின்றனர். மேலும் Hilaoi and Edward (2024) பொறியியல் பீட விரிவுரையாளர்களின் தகவல் தேடும் நடத்தையை ஆய்வு செய்ததன் அடிப்படையில் அவர்களில் பெரும்பாலானோர் கல்விசார் மற்றும் ஆய்வுத் தேவைகளுக்காக தகவலைத் தேடுவதாகவும் அவர்கள் கூடுதலாகப் பயன்படுத்தும் தகவல் வளங்களாக அச்சிடப்பட்ட மற்றும் மின்னியல் ஆய்விதழ்களை அடையாளப்படுத்துகின்றனர்.

எனவே கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல்தேவை உயர்கல்விப் பரப்பிலே மிகவும் காத்திரமானதாகவும், அத்தியாவசியமானதாகவும் உள்ள நிலையில் அவர்கள் தகவல் தேடல்/ அணுகலின்போது வெளிப்படுத்தப்படும் நடத்தைப் பாங்கானது பல்வேறு விதமாகக் காணப்படுவதும் அவதானத்திற்குரியதாகும். எனவே இவ் ஆய்வானது சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடும் நடத்தையை அடிப்படையாகக் கொள்கின்றது. இலங்கையில் வேறு துறைகளைச் சார்ந்த கல்விசார் உத்தியோகத்தர்களை அடிப்படையாகக்கொண்டு இவ்விடயம் சார்ந்து சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் விசேடமாக அழகியல்துறை கல்விசார் உத்தியோகத்தர்களை அடிப்படையாகக்கொண்டு ஆய்வுகள் முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை என்பதன் அடிப்படையிலும் இவ்ஆய்வு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக கல்விசார் ஆளணியினரை முன்னிலைப்படுத்துகின்றது.

**நோக்கம்**

இவ்ஆய்வின் பிரதான நோக்கம் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக கல்விசார் ஆளணியினரின் தகவல் தேடும் நடத்தைப் பாங்கை மதிப்பிடுவதாகும் இவ்வகையில் இவ்ஆய்வு பின்வரும் விசேட நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேவையையும் எந்நோக்கத்திற்காக தகவல் தேடலில் ஈடுபடுகின்றனர் என்பதையும் அறிதல்.
2. எவ்வாறான தகவல் வளங்களை அதிகம் பயன்படுத்துகின்றனர்/ அணுகுகின்றனர் என இனம் காணல்.
3. கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடுகையின்போது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை தெரிந்துகொள்ளல்.

4. தகவல் தேடுகையின்போது கல்விசார் உத்தியோத்தர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனம் காணல்.

**ஆய்வுப் பிரச்சினை**

தமது பிரதான சேவைகளான/ கடமைகளான கற்பித்தல், ஆய்வு மற்றும் ஏனைய சமூகம்சார் சேவைகளை முன்னெடுப்பதற்கு கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு சரியான தகவலானது தேவைப்படுகின்றது. எனவே கல்விசார் உத்தியோகத்தர்கள் தமக்குத் தேவையான, பொருத்தமான தகவலைத் தேர்ந்தெடுப்பதற்காக சமகாலத் தகவல் சாதனங்களையும், வெளியீடுகளையும் அணுகவேண்டியவர்களாக உள்ளனர். எனினும் அபரிமிதமான தகவல் வளங்களின் பெருக்கநிலையில் இச்செயற்பாட்டினை முன்னெடுப்பதில் பிரச்சினைகள் காணப்படுவதோடு உத்தியோகத்தர்களின் தகவல்தேடும் நடத்தையானது தவிர்க்கமுடியாத விடயமாக இச்செயற்பாட்டில் காணப்படுகின்றது. தகவல் தேடுகையில் தகவல் பெருக்கம் போன்ற காரணிகளுடன் வயது, பால், கல்விநிலை மற்றும் தனிப்பட்ட திறன் போன்றன கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் வளங்களைப் பயன்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துவதாக (Thilagavathi, T & Thirunavukkarasu, A 2015). தமது ஆய்வின் முடிவில் கருத்துரைத்துள்ளனர். பொதுவாக கல்விசார் சமூகத்தில் அடையாளப்படுத்தப்படும் இந்நிலைப்பாட்டிற்கு அழகியல் துறைசார் கல்வியியலாளர்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல. குறிப்பாக பல்வேறு வகையான தகவல் வளங்களை/ சாதனங்களை பயன்படுத்த வேண்டிய தேவைப்பாடு அவர்களுக்கும் காணப்படுவதோடு அழகியற்துறைசார் உயர்கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் அறிமுறையுடன் செயல்முறையுடன் முக்கியத்துவம் வழங்கும் நிலையில் அவ்விடயம் சார்ந்து தகவல் தேடல்களுக்கு கூடிய கரிசினை செலுத்தவேண்டியவர்களாகின்றனர். இசைக்கலைஞர்கள், அவற்றைக் கற்பிப்போர் தகவல் தேடும்போது அவர்கள் நூலியல்சார் மற்றும் முதல்

நிலை இசை வளங்களை பல்வேறு வகைப்பட்ட தகவல் வள வடிவங்களின் ஊடாக நாடவேண்டியவர்களாகின்றனர். (Laplante, A and Downie, S. 2006) என்ற கருத்தும் அழகியல்சார் அனைத்துப் பிரிவுகளுக்கும் பொருத்தமானதாகும். மேலும் கல்விசார் உத்தியோகத்தர்கள் தகவல் வளமாக ஆய்விதழ்களைப் பயன்படுத்ததுவது தொடர்பாக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் கவ்லிசார் உத்தியோகத்தர்களின் வயதுப் பரம்பரை வேறுபாட்டை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்விலும் அவர்களின் தகவல் தேடுகையில் சில மாறுபட்ட மற்றும் சில ஒத்துப்போகக்கூடிய முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டன. (Prashanthan, B. 2017) இதன் அடிப்படையிலும் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக கல்வியியலாளர்களை கருத்திற்கொண்டு இப்பிரச்சினையை இனங்காண்பது பொருத்தமானதாக அமையலாம்.

## ஆய்வு வினாக்கள்

1. கல்விசார் உத்தியோகத்தர்களின் எத் தேவைகளுக்காக தகவல் தேவைப்படுகின்றது?
2. எத்தகவல் வளங்களை தகவல் தேடும்போது கூடுதலாக விரும்புகின்றனர்?
3. கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடும் நடத்தையின் மீதான குடித்தொகைக் காரணிகளின் தாக்கம் என்ன?
4. தகவல் தேடுகையின்போது கல்விசார் உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

## ஆய்வு முறைமையியல்

இவ்ஆய்வு தொகைசார் ஆய்வு முறைமையினை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு அளவைசார் ஆய்வு முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக் கருவியாக இவ்ஆய்வில் வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக் குடித்தொகையாக

*Journal of Sri Lanka Library Review, Volume 40, Issue I, January 2026, 24-44*
*DOI:*

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் 2025ம் ஆண்டில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற நிரந்தர விரிவுரையாளர்கள் 52 நபர்களிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டன. ஆய்வுக் குடித்தொகை குறைவாகக் காணப்படுவதால் முழுக் குடித்தொகையும் ஆய்வு மாதிரியாக இவ்ஆய்வில் கருத்திற்கொள்ளப்பட்டது. ஆய்வுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்தானது ஆய்வுக்குரிய தகவல்களைத் திரட்டுவதற்காக லிக்கேட் அளவீட்டின் (likert scale) அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. (SA – வலுவாக ஏற்றுக்கொள்கிறேன், A - ஏற்றுக்கொள்கிறேன், D – மறுக்கிறேன், SD – வலுவாக மறுக்கிறேன்) ஆய்வுக்குட்படுத்திய நபர்களில் 44 விரிவுரையாளர்கள் பதிலளித்திருந்தனர். ஆய்வுக்கான தரவுகள் எண்ணிக்கை மற்றும் சதவீதங்கள் போன்ற விளக்கநிலை புள்ளிவிபரங்களின் அடிப்படையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வுக்கான மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட 52 கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு வினாக்கொத்து விநியோகிக்கப்பட்டதுடன் அவற்றுள் 44 (84.61%) மீளக் கிடைக்கப்பெற்றன. இதற்கான குடித்தொகைப் பண்புகள் அட்டவணை 01 இல் காட்டப்படுகின்றன.

அட்டவணை 01: குடித்தொகைப் பண்புகள்

| பால் நிலை | | கல்வித் தகைமை | | | தொழில் தரம் | | | | | வயது மட்டம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | பெண் | இளமாணிப் பட்டம் | முதுமாணி | கலாநிதி | தகுதிகாண் விரிவுரையாளர் | விரிவுரையாளர் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - I | பேராசிரியர் | 25 - 34 | 35 - 44 | 45 – 54 | 55 < |
| 21 | 23 | 08 | 21 | 15 | 08 | 02 | 23 | 09 | 02 | 12 | 11 | 17 | 03 |

Source: Author’ calculations

**கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேவைப்பாடும் நோக்கமும்**

கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடும் நோக்கத்தினை அவதானிக்கின்றபோது அவர்களில் பெரும்பாலானோர் கற்பித்தல் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காகவே தகவல் தேடுகின்றனர் என்பது தெளிவாகின்றது. குறிப்பாக ஆய்வில் பங்கெடுத்த 40 நபர்கள் - (90.91%) தாம் கற்பித்தல் மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளுக்காகவே தகவல் தேடுவதாகக் கருத்துரைத்துள்ளனர். அதேவேளை தமது தனிப்பட்ட தொழில்சார் விருத்திக்காக தகவல்தேடும் நடத்தையானது 37 (84.09%) கல்விசார் உத்தியோகத்தர்களிடம் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

அட்டவணை 02: கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேவைப்பாடும் நோக்கமும்

| தகவல் தேவைகள் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| கற்பித்தல், ஆய்வு | 40 | 90.91% |
| தனிப்பட்ட தொழில்சார் ரீதியான விருத்தி | 37 | 84.09% |
| சமகாலத் தகவல்கள் (அரச/ அரசியல்/ பொருளாதாரம் போன்றன) | 29 | 65.91% |
| தனிநபர் சுகாதாரம்/ சமூக நலன்புரித் தகவல்கள் | 30 | 68.18% |
| பிற/ ஏனைய | 10 | 22.73% |

Source: Author' calculations

கல்விசார் உத்தியோகத்தர்கள் தமது தகவல் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக தகவல் தேடும்/ அணுகும் நடவடிக்கையின்போது எவ்வகையான தகவல் வளங்களை பயன்படுத்துகின்றனர் என நோக்கும்போது பெரும்பாலான

கல்வியியலாளர்கள் 40 (90.91%) அச்சிடப்பட்ட பாடநூல்களையும், உசாத்துணை நூல்களிலிருந்து தமது தகவல் தேவையினை பூர்;த்தி செய்கின்றனர் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் அச்சிடப்பட்ட ஆய்விதழ்களை 31 (70.45%) உத்தியோகத்தர்கள் தமது தகவல் தேடும்/ அணுகும் சாதனமாகப் பயன்படுத்துகின்றனர். அதேவேளை இணையத்தினை தகவல் தேடும் வளமாக 38 (86.36%) கல்விசார் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்றனர். மின்னியல் வளங்களை பயன்படுத்துவோர் 20 (45.45%) காணப்படுவதை ஆய்வு வெளிப்படுத்துகின்றது.

அட்டவணை 03: கல்விசார் உத்தியோகத்தர்கள் பயன்படுத்தும் தகவல் வளங்கள்

| தகவல் தேவைகள் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 1. அச்சிடப்பட்ட நூல்கள் (பாடநூல் உசாத்துணைகள்) | 40 | 90.91% |
| 2. அச்சிடப்பட்ட ஆய்விதழ்கள் | 31 | 70.45% |
| 3. மின்னியல் வளங்கள் (E நூல்கள், ஆய்விதழ்கள், நிகழ்நிலைத் தரவுத் தளங்கள்) | 20 | 45.45% |
| 4. இணையம் | 38 | 86.36% |
| 5. ஆய்வு மாநாடு/ பயிற்சிப்பட்டறை/ கருத்தரங்குகள் | 24 | 54.54% |
| 6. சகபாடி குழாம்/ துறைசார் நிபுணர்கள் | 19 | 43.18% |
| 7. பிற/ ஏனைய | 06 | 13.64% |

Source: Author' calculations

## குடித்தொகைப் பண்புகள் தகவல் தேடும் நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கம்

பொதுவாக தகவல் தேடும்/ அணுகும் நடத்தையில் குடித்தொகைப் பண்புகளின் செல்வாக்கினை மதிப்பிடுதல் முக்கியமானதாகும். இவ்வகையில் பால்நிலையானது கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடும் நடத்தையில் தாக்கத்தினை செலுத்துகின்றதா என்பதை ஆய்வுக்குட்படுத்தியதன் அப்படையில் பால்நிலையானது தகவல் தேடும் நடத்தையில் மிகையான தாக்கத்தினைச் செலுத்துவதாக 3 (6.82%) நபர்களும், தாக்கத்தினைச் செலுத்துவதாக 4 (9.09%) நபர்களும் மாத்திரமே கருத்துத் தெரிவித்த அதேவேளை 84.09% சதவீதத்தினர் (11 (25%) – மறுக்கின்றேன், 26 (59.09%) வலுவாக மறுக்கின்றேன்) பால்நிலை வேறுபாடானது தகவல் தேடும் நடத்தையில் தாக்கத்தினைச் செலுத்தவில்லை எனக் கருதுகின்றனர்.

மேலும் கல்விசார் உத்தியோகத்தர்களின் கல்வித் தகைமையானது எவ்வகையான தாக்கத்தினைத் தகவல் தேடும் நடத்தையில் பிரதிபலிக்கின்றது என்பதனை ஆய்வுக்குட்படுத்தியதன் அடிப்படையில் கல்வித் தகைமையானது தகவல் தேடும் நடத்தையில் தாக்கத்தினைச் செலுத்துகின்றது என்பதனை ஏற்றுக்கொள்வதாக 15 (34.09%) நபர்களும் வலுவாக ஏற்றுக்கொள்வதாக 11 (25%) நபர்களும் கருத்துரைக்க, 18 (40.91%) உத்தியோகத்தர்கள் இவ்விடயம் தாக்கம் செலுத்துகின்றது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கருத்துரைத்துள்ளனர். அதாவது வலுவாக ஏற்றுக்கொள்ள முடியாது என 04 (9.09%) நபர்களும், ஏற்றுக்கொள்ள முடியாது என 14 (31.82%) நபர்களும் கருத்துரைத்துள்ளனர்.

அதேவேளை கல்விசார் உத்தியோகத்தர்களின் தொழில்தரம் தகவல் தேடும் நடத்தையில் தாக்கம் செலுத்துவதாக ஆய்வுக்குட்படுத்தியவர்களில் 15 (34.09%) வலுவாக ஏற்றுக்கொள்ள, 19 (43.18%) ஏற்றுக்கொள்வதாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். 6 (13.64%)

*Journal of Sri Lanka Library Review, Volume 40, Issue I, January 2026, 24-44*
*DOI:*

நபர்கள் தொழில்தரம் தாக்கம் செலுத்தும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், 4 (9.09%) கல்வியியலாளர்கள் வலுவாக ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கருத்துரைத்துள்ளனர். எனவே 75% ற்கும் மேற்பட்ட கல்விசார் உத்தியோகத்தர்கள் தொழிற்தரமானது தகவல் தேடும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதாக கருத்துரைக்கின்றனர்.

தகவல் தேடும் நடத்தையில் குடித்தொகைசார் பண்புகளில் மிக முக்கியமான மற்றுமொரு விடயமாக விளங்குவது வயது மட்டமாகும். இவ்வகையில் ஆய்வுக்குட்படுத்திய 44 கல்வியியலாளர்களிடம் வயது வேறுபாடானது அதாவது இளம் கல்விசார் உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட கவ்வியாளர்களைவிட விரைவாகவும் கூடுதலாகவும் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தகவல் தேடலில் முனனிலை வகிக்கின்றார்களா என வினவப்பட்ட போது அதனை வலுவாக ஏற்றுக்கொள்வதாக 06 (13.64%) உத்தியோகத்தர்களும், ஏற்றுக்கொள்வதாக 15 (34.09%) உத்தியோகத்தர்களும், வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை என 12 (27.27%) உத்தியோகத்தர்களும், ஏற்றுக்கொள்ளவில்லை என 11 (25%) உத்தியோகத்தர்களும் பதிலளித்துள்ளமையை ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. விசேடமாக ஆய்வுக்குட்படுத்தியவர்களில் 52.27% கல்வியியலாளர்கள் 25 தொடக்கம் 44 வயது மட்டத்தினர்களாக உள்ளமை இங்கு அவதானத்திற்குரியதாகும்.

அட்டவணை 04: குடித்தொகைசார் பண்புகள் தகவல் தேடும் நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கம்

| **குடித்தொகைசார் பண்புகள்** | **வலுவாக ஏற்றுக் கொள்கின்றேன்;** | **ஏற்றுக் கொள்கின்றேன்** | **ஏற்றுக் கொள்ளவில்லை** | **வலுவாக ஏற்றுக் கொள்ளவில்லை** |
|---|---|---|---|---|
| பால்நிலை | 03 (6.82%) | 04 (9.09%) | 11 (25%) | 26 (59.09%) |
| கல்விசார் தகைமை | 11 (25%) | 15 (34.09%) | 14 (31.82%) | 04 (9.09%) |

| | | | | |
|---|---|---|---|---|
| தொழிற்தரமும் அனுபவமும் | 15 (34.09%) | 19 (43.18%) | 06 (13.64%) | 04 (9.09%) |
| வயது மட்டம் | 06 (13.64%) | 15 (34.09%) | 12 (27.27%) | 11 (25%) |

Source: Author' calculations

## தகவல் தேடலில்/ அணுகலின் போது எதிர்கொள்ளும் சவால்கள்

தகவல் தேவையின்போது பாவனையாளர்கள் பல்வேறு தகவல் வளங்களினூடாகவும், பல்வேறுபட்ட முறைமைகளினூடாகவும் தகவலை நாட/ அணுக முயற்சிக்கலாம் இம்முயற்சி நேர்த்தியாக அமையும்போதே வினைத்திறனான விதத்தில் தகவல் தேவையைப் பூர்த்தியாக்க முடியும். எனினும் தகவல் தேடலின்போது பல்வேறு சவால்களை தகவலை நாடுவோர் எதிர்கொள்கின்றனர். இவ்வகையில் கல்விசார் உத்தியோகத்தர்கள் பொதுவாக எதிர்நோக்கும் சவால்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு அபிப்பிராயங்கள் பெறப்பட்டதன் அடிப்படையில் நட்புறவுத் தன்மை அற்ற நூலக உத்தியோகத்தர்கள் காணப்படுகின்ற விடயம் குறைந்தளவு எதிர்கொள்ளப்படும் சவாலாக இனம் காணப்பட்டதுடன் (வலுவாக ஏற்றுக்கொண்டோர் 6.81%) கூடியளவு எதிர்நோக்கும் சவால்களாக தகவல் அறிதிறன் குறைவாகக் காணப்படல் (வலுவாக ஏற்றுக் கொண்டுள்ளனர் 34.09%) மற்றும் போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் நூலகத்தில் காணப்படாமை (வலுவாக ஏற்றுக் கொண்டனர் 36.36%) என்பன கூடியளவு தாக்கத்தினைச் செலுத்தும் காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதனை அட்டவணை 05 இல் தெளிவாகக் காணலாம்.

அட்டவணை 05: தகவல் தேடலில்/ அணுகலில் எதிர்கொள்ளும் சவால்கள்

| கல்விசார் உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்; | SA | A | D | SD |
|---|---|---|---|---|
| 1. போதுமான உட்கட்டுமான வசதி இன்மை | 16 | 10 | 12 | 06 |
| 2. போதுமான புதிய தகவல் வளங்கள் காணப்படாமை | 10 | 10 | 10 | 14 |
| 3. பொருத்தமற்ற தகவல் வளங்கள் காணப்படுகின்றமை | 06 | 12 | 15 | 11 |
| 4. தகவல் அறிதிறன் காணப்படாமை | 15 | 10 | 11 | 08 |
| 5. நூலக உத்தியோகத்தர்களிடம் நட்புறவான தொடர்பாடல் காணப்படாமை | 03 | 07 | 14 | 20 |
| 6. நூலகத் தகவல் வளங்கள் பற்றிய போதுமான விழிப்புணர்வு இன்மை | 07 | 11 | 15 | 11 |

Source: Author' calculations

ஆய்வுக்குட்படுத்தியவர்களில் பெரும்பாலானோர் (91.91%) தமக்குத் தகவலானது ஆய்வு, கற்பித்தல் மற்றும் ஆய்வு மேற்பார்வைகளுக்காகவே தேவைப்படுவதாகவும், அதற்கு அண்மித்ததாக தமது தொழில்சார்/ புலமைசார் விருத்திக்காகவும் தகவல் தேவைப்பாடு காணப்படுவதாகவும் (84.09%) கருத்துரைத்துள்ளனர். இவ் ஆய்வுப் பெறுபேறானது Ogunbodede (2019)) ஆய்வு முடிவினை ஒத்ததாக இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. பெரும்பாலான கல்விசார் உத்தியோகத்தர்கள் தமது தகவல் தேவைக்காக பயன்படுத்தும் தகவல் வளமாக இணையம் மற்றும் மின்னியல் வளங்கள் காணப்படுவதாக (Thilagavathi & Thirunavukkarasu 2015). மற்றும் Ahiazu and Okon (2015) போன்றோர் தமது ஆய்வில் குறிப்பிட்டிருந்ததோடு, சமகாலப் போக்கிலும் இத்தகைய நிலை

வேறுசில கல்விசார் உத்தியோகத்தர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றது. எனினும் இவ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட கல்விசார் உத்தியோகத்தர்களில் அனேகமானோர்களின் தெரிவாக அச்சிடப்பட்ட நூல்களும் (90.91%), தொடர்ந்து இணையமும் (86.36%) காணப்படுவதையும், மின்னியல் வளங்கள் 50% ற்கும் குறைவான ஆய்வுக் குடித்தொகையினரால் பயன்படுத்தப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. மேலும் இவ்ஆய்வில் குடித்தொகைப் பண்புகள் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய பெறுபேறுகளை அவதானிக்கின்றபோது பால்நிலையானது தகவல் தேடும் நடத்தையில் தாக்கத்தினைச் செலுத்தும் காரணியாக ஆய்வுக்குட்படுத்தியவர்களால் அடயாளப்படுத்தப்படவில்லை. அதாவது 37 நபர்கள் பால்நிலையானது தகவல் தேடும் நடத்தையில் தாக்கம் செலுத்தவில்லை எனக் கருத்துரைக்க (இதனை வலுவாக ஏற்றுக்கொண்டவர்கள் 26 மற்றும் ஏற்றுக்கொண்டவர்கள் 11) 07 கல்வியியலாளர்களே பால்நிலையானது தகவல் தேடும் நடத்தையில் தாக்கம் செலுத்துவதாக ஏற்றுக்கொள்கின்றார்கள். அதேவேளை கல்விசார் உத்தியோகத்தர்களின் கல்வித்தகைமை, வயது என்பன தகவல் தேடும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதாகவும் கல்வித்தகைமை அதிகமானோரும், இளவயது உத்தியோகத்தர்களும் விரைவாக தகவல் தேடும் நடத்தையைக் கொண்டிருப்பதாக இவ்விடயம்சார் ஆய்வுகளின் பெறுபேறுகள் அமைய எடுத்துக்காட்டாக Ogunboded (2019) மேற்கொண்ட ஆய்வும் Garbado (2018) இல் மேற்கொண்ட ஆய்வின் பெறுபேறும் மேற்குறித்த முடிவினையே வெளிப்படுத்தின. எனினும் இவ் ஆய்வின் குறித்த விடயம் சார் பெறுபேறானது கல்வித் தகமையானது தகவல் தேடும் நடத்தையில் குறிப்பிடத்தக்களவில் தாக்கத்தைச் செலுத்துவதாகவும், ஆனால் வயது வேறுபாடானது தகவல் தேடும் நடத்தையில் தாக்கத்தினைச் செலுத்தவில்லை என அமைவது விசேட அவதானத்திற்குரியதாகும். அதாவது வயது மட்டம் தாக்கம் செலுத்துவதாக ஏற்றுக்கொண்டவர்கள் 21 (47.73%) நபர்களாகக்

(வலுவாக ஏற்றுக்கொண்டவர்கள் மற்றும் ஏற்றுக்கொண்டவர்கள்) காணப்பட வயதுமட்டம் தாக்கம் செலுத்துவதாக ஏற்றுக்கொள்ளாதவர்களாக 23 (52.27%) நபர்கள் காணப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும். பெறுபேறுகளின் அடிப்படையில் கல்விசார் உத்தியோகத்தர்களின் தொழிற்தரமானது (விரிவுரையாளர் - தகுதிகாண், விரிவுரையாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் I, II, பேராசிரியர்) தகவல் தேடும் நடத்தைப் பாங்கில் செல்வாக்குச் செலுத்துவதாகவும் இவ்ஆய்வு வெளிப்படுத்துகின்றது. விரிவாக தரவுகளைப் பகுப்பாய்வுக்குட்படுத்தும்போது தொழிற்தரமும் அனுபவமும் தகவல் தேடுதலின் போது தாக்கம் செலுத்துவதாக ஆய்வுக்குட்படுத்தியவர்களில் 34 கல்வியியலாளர்கள் கருத்துரைத்துள்ளனர். இது முழு ஆய்வுக் குடித்தொகையில் 85% ஆகும். ஆகவே தொழிற்தரமும் அனுபவமும் தாக்கம் செலுத்தவில்லை எனக் கருத்துரைத்தோர் 15% மாத்திரமே என்பது கவனத்திற்கொள்ளத்தக்கதாகும். மேலும் இவ்ஆய்வானது தகவல் தேடும் செயற்பாட்டிற்கு முக்கிய தடையான காரணிகளாக போதுமான உட்கட்டுமான வசதிகள் நூலகத்தில் காணப்படாமை மற்றும் தகவல் அறிதிறன் பொதுவான மட்டத்தில் காணப்படாமை போன்றனவற்றை முக்கியமான தடைகளாக வெளிப்படுத்தி நிற்கின்றது. ஆய்வுத் தரவுகளை ஆழமாக நோக்குகின்றபோது போதுமான உட்கட்மைப்பு வசதி இன்மை என்பதை 26 கல்வியியலாளர்கள் ஏதோ ஒரு வகையில் ஏற்றுக்கொள்கின்றார்கள். அதனைப்போலவே தகவல் அறிதிறன் காணப்படாமையே எதிர்கொள்ளப்படும் சவாலாக 25 கல்வியியலாளர்கள் கருத்துரைத்துள்ளமை ஆய்வுப் பெறுபேறுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

## முடிவும் பரிந்துரைகளும்

அழகியல் துறை கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடும்/ அணுகும் நடத்தைப் பாங்கினை ஆய்வுக்குட்படுத்தியதன்

அடிப்படையில் இவ்ஆய்வானது கற்பித்தல், ஆய்வு மேற்பார்வை நடவடிக்கை மற்றும் தமது தொழில்சார்/ புலமைசார் விருத்தி என்பவற்றுக்காக தகவல் தேடுவதே அழகியல் துறைசார் கல்வியாளர்களின் தகவல் தேடும் தேவையாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. பெரும்பாலான உத்தியோகத்தர்கள் அச்சிடப்பட்ட நூல்களை தமது பிரதான தகவல் வளமாக பயன்படுத்துகின்றனர் என்பதும் இவ் ஆய்வின் ஊடாக தெளிவாகின்றது. மேலும் தகவல் தேடும் நடத்தையின்போது பால்நிலை, வயதுமட்டம் என்பன தாக்கம் செலுத்தவில்லை என்பது இவ்ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை தகவல் தேடும் நடத்தைக்குத் தடையாக போதுமான உட்கட்டமைப்பு வசதி இன்மை, தகவல் அறிதிறன் மட்டம் குறைவாகக் காணப்படல் என்பன பிரதான காரணிகளாக இவ் ஆய்வானது அடையாளப்படுத்துகின்றது. எனவே இம்முடிவுகளின் அடிப்படையில் மேலும் விருத்தியடைய வேண்டும் என இனம் காணப்பட்ட விடயங்கள் சார்ந்து சில சிபாரிசுகளை இவ் ஆய்வு முன்மொழிகின்றது. அவ்வகையில் கல்விசார் உத்தியோகத்தர்கள் தகவல் வளத் தெரிவில் மின்னியல் சாதனங்களின் பயன்பாடு குறைவாகவே காணப்படுகின்றபோது சமகால ஏனைய கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல்வளசாதனப் பயன்பாட்டில் அச்சிடப்பட்ட சாதனங்களுக்கு நிகராக அல்லது அண்மித்ததாக மின்னியல் சாதனங்களின் பயன்பாடு காணப்படுகின்றமையால் அதனை உபயோகிக்கும் முறை தொடர்பாக செயல்முறை ரீதியான பயிற்சிப் பட்டறைகளை குறித்த கால இடைவெளிகளில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என இவ் ஆய்வு சிபார்சு செய்கின்றது. மேலும் தகவல் தேடுகைக்கு சவாலான காரணிகளுள் ஒன்றாக இனம்காணப்பட்ட தகவல் அறிதிறனானது சமகால உயர்கல்விப் பரப்பில் கல்வியாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் திறனாக அடையாளப்படுத்தப்படும் நிலையில் நிறுவனம் தனது உத்தியோகத்தர்கள் மேம்பாட்டு மையத்தின் (SDC) ஊடாக குறுங்காலப்

பயிற்சி நெறிகள், செயலமர்வுகளை கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு ஒழுங்கமைத்தல் சிறப்பானதாக அமையும் என இவ்ஆய்வு சிபார்சு செய்கின்றது. நிறைவாக உட்கட்டுமான வசதிகள் குறைவாகக் காணப்படல் மற்றுமொரு தடையாக இனம்காணப்பட்ட நிலையில் இவ்விடயத்தினை உயர்கல்வி நிறுவனமானது உடன் நிவர்த்திசெய்யக் கூடிய விடயங்களை விரைவாக முன்னெடுப்பதன் மூலமும் ஏனைய விடயங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் வினைத்திறனாகப் பூர்த்தியாக்குவதன் மூலமும் உயர்கல்விச் சூழலில் முக்கியமான ஆளனியினராக கருதப்படும் கல்விசார் உத்தியோகத்தர்களின் தகவல் தேடும் நடத்தைக்குச் சிறப்பான பங்களிப்பினை நல்கமுடியும் எனலாம்.

**உசாத்துணைகள்**

Aina, L. O. (2005). Library and Information Services text for Africa Ibadan: Third world Information Service. *S AJnl Libs & Info Sci,* 71 (I) https://scispace.com/pdf/library-and-information-science-text-for-africa-l-o-aina-14j5lxtlhm.pdf

Akinola, S.F. (2011) Information seeking Behavior of Lecturers in Faculties of Education in Obafemi Awolowo University, Ife and University of Ibadan. *Samaru Journal of Information Studies,* 9 (2), https://doi:10.4314/lsjis.v9i2.63656

Garbado, D. A. (2018). Information seeking Behaviour of Academic Staff in Wachemo University, Ethiopia. *International Journal of Engineering Sciences and Computing*, 8(4), https://www.academia.edu>information

Gunasekara, Damayanthi. (2008). Information needs and Information use: a research based on Social Scientisls at the Open University of Sri Lanka. *Journal of the University Librarianss Association of Sri Lanka,* 12, p.49-67.

Hemanth Kumara, G. H. & Uma, Jegannath. (2019). Information seeking Behaviour of Faculty members of Agricultural Universitiesin Karnataka: A case study. *Indian Journal of Library Science and Information Technology*, 4 (1), p. 19 – 20.

Hilari, Edward. (2024). Information seeking Behavior of Lecturers in the Faculty of Engineering University of Maiduguri. *FUGUS Information Journal of Library and Information Sciences*, 1 (1), p. 114-123. https://doi:10.57233/fijlis.v/11.12

Ifijeh, B.A. Ogbomo, M.O & Ifijeh, G. (2018). Utilization of Academic Library Resources for Research Productivity among lecturers in private Universities in South Nigeria. *Library Philosophy and practices*, https://digitalcommons.unl.edu/cgi/viewcontent.cgi?article=5439&context=libphilprac

Kahn Dar Faaz, Ahmed Sajjed & Kahn Asad. (2017). Information seeking Behaviour of Teaching Staff and Students using Central Library of the University of Pershawar, *Pershawer University Teaching Association Journal*, 25 (1– 2), p.145-159. reserchgate.net/publication/392767015

Laplante, A and Downie, J.S. (2006) Everyday lifemusic information Seeking behavior of young adualts, *Proceedings of the 7th International Conference of the Society for Music Information Retrival,* p. 381-382. https://ismir2006.ismir.net/PAPERS/ISMIRo6132_Paper.pdf

Ogunbodede, Kotawole Franeis & Oniorosa, O. N. (2019). Information seeking Behaviour of Academic Staff in three Universities in Bayelsa State, Nigeria. *Journal of Education, Administration, Management and Planning,* 1 (01), https//www.researchgate.net/publication/351288044,2-14

Prashanthan, B. (2017). Journal usage among Multigenerational Academic of Swamy Vipulananda Institute of Aesthetic Studies social impact of Librarianship scholarship towards substantial development goals, *NACLIS,* p. 47-52.

Thilagavathi, T & Thirunavukkarasu, A. (2015). Information needs and seeking Behaviour of Faculty members of Avinashilingam University, Coimbatore. *International Journal of Digital Library Services,* .5 (3), p. 69-76.

Wilson, T. D. (2000). Human Information Behaviour. *Information Science*, 3 (2), p.49-55. inform.nu/Articles/vol3/v3n 2p49-56pdf